# TNUSRB – SUB INSPECTOR RECRUITMENT TRAINING – 2022
## MODEL EXAM II – TAMIL ELIGIBILITY TEST

1. “அமுதென்று“ என்னும் சொல்லைப் பரித்து எழுதக் கிடைப்பது __________.
   a. அமுது + தென்று  b. அமுது + என்று
   c. அமுது + ஒன்று  d. அமு + தென்று

2. ”தமிழ்மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்” என்று பாடியவர் _________.
   a. கண்ணதாசன்  b. பாரதியார்
   c. பாரதிதாசன்  d. வாணிதாசன்

3. கிணறு என்பதைக் குறிக்கும் சொல் __________.
   a. ஏரி  b. கேணி  c. குளம்  d. ஆறு

4. இல்லாது + இயங்கும் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைப்பது _________.
   a. இல்லாது இயங்கும்  b. இல்லா இயங்கும்
   c. இல்லாதியங்கும்  d. இல்லதியங்கும்

5. பச்சைப் பசேல் என்ற வயலைக் காண இன்பம் தரும்.
   பட்டுப்போன மரத்தைக் காண __________ தரும்.
   a. அயர்வு  b. கனவு  c. துன்பம்  d. சோர்வு

6. மார்கழி மாதத்தின் இறுதிநாள் ____________.
   a. பொங்கல் விழா  b. மாட்டுப் பொங்கல்
   c. போகித் திருநாள்  d. எதுவுமில்லை

7. அகரவரிசைப்படுத்தப்பட்ட தொடரைத் தேர்ந்தெடுக்க.
   a. திருக்கடல் மல்லை, குகைக்கோவில், புலிக்குகை, ஒற்றைக்கல் யானை
   b. புலிக்குகை, குகைக்கோவில், திருக்கடல் மல்லை, ஒற்றைக்கல் யானை
   c. ஒற்றைக்கல் யானை, குகைக்கோவில:, திருக்கடல் மல்லை, புலிக்குகை
   d. குகைக்கோவில், திருக்கடல் மல்லை, ஒற்றைக்கல் யானை, புலிக்குகை

8. மயங்கொலிப் பிழையற்ற தொடரைக் காண்க.
   a. பறவை வானில் பரந்தது  b. கதவு மெள்ளத் திறந்தது
   c. திருவிளாத் தேர் வந்தது  d. பூ மணம் வீசியது

9. மீனவர்கள் கடலில் மன உறுதியுடன் தொழில் செய்கின்றனர். பின்வருந்தொடர்களுள் தொடர்பற்ற வினா எது?
   a. மீனவர்கள் எப்படித் தொழில் செய்கின்றனர்?
   b. யார் கடலில் தொழில் செய்கின்றனர்?

c. மீனவர்கள் ஏன் தொழில் செய்கின்றனர்?
d. எங்கு மீனவர்கள் தொழில் செய்கின்றனர்?

10. "கவிஞாயிறு" என்னும் அடைமொழியால் அழைக்கப்படுபவர் ______________.
a. பழனிபாரதி b. தாராபாரதி c. பாரதியார் d. பாதிதாசன்

11. பாபுஜி என்று மக்களால் அழைக்கப்பட்டவர் ______________
a. காந்தியடிகள் b. நேருஜி c. நேதாஜி d. ராஜாஜி

12. சொல்லின் வகைகள் ______________.
a. நான்கு b. மூன்று c. இரண்டு d. ஐந்து

13. "தமிழ் மொழியின் உபநிடதம்" எனப் போற்றப்படுவது ______________.
a. தேம்பாவணி b. பராபரக்கண்ணி
c. பரமார்த்த குரு கதை d. மணிமேகலை

14. மணிமேகலா தெய்வம் மணிமேகலையை அழைத்துச் சென்ற தீவு ___________.
a. இலங்கைத்தீவு b. இலட்சத்தீவு
c. மணிபல்லவத்தீவு d. மாலத்தீவு

15. இடுகுறிப்பெயரை வட்டமிடுக.
a. பறவை b. மண் c. முக்காலி d. மரங்கொத்தி

16. பெயர்ச்சொல்லின் வகைகள் ________________.
a. நான்கு b. ஆறு c. மூன்று d. ஐந்து

17. காரணப்பெயரைத் தேர்ந்தெடு:
a. பாறை b. கதவு c. மேசை d. காதணி

18. திருக்குறளுக்கு முதன் முதலில் உரை எழுதியவர் ________________.
a. ஜி.யு. போப் b. பரிமேலழகர்
c. மு.வ. d. மணக்குடவர்

19. "லைட் ஆ∴ப் ஆசியா" என்னும் ஆங்கில நூலின் எழுத்தாளர் ______________.
a. பாரதிதாசன் b. தேசிக விநாயகனார்
c. தாராபாரதி d. எட்வின் அர்னால்டு

20. "கும்பி" என்பதன் பொருள் ________________.
a. கால் b. கை c. வயிறு d. தலை

21. சத்திய தருமச்சாலை என்னும் அமைப்பைத் தொடங்கியவர் ____________.
a. தாயுமானவர் b. வள்ளலார்
c. இளங்கோவடிகள் d. திருவள்ளுவர்

22. அணி என்பதன் பொருள் ______________.
a. மாலை b. காலை c. வளையல் d. அழகு

23. உயர்வு நவிற்சி அணி பயின்று வந்துள்ள தொடர் _______________.
a. உள்ளம் மகிழ்ந்து பாராட்டினர் b. தன்னையே மறந்து நின்றான்.
c. காந்தியடிகள் நேர்மையானவர் d. வான் உயர்ந்த மலை

24. அரச்சலூர் கல்வெட்டில் எழுதப்பட்டுள்ளவை ____________.
a. தமிழ் எழுத்தும் ஓவிய எழுத்தும்
b. தமிழ் எழுத்தும் கண்ணெழுத்தும்
c. தமிழ் எழுத்தும் வட்டெழுத்தும்
d. தமிழ் எழுத்தும் கிரந்த எழுத்தும்

25. வல்லின எழுத்துகள் பிறக்கும் இடம் ______________.
a. தலை b. மார்பு c. மூக்கு d. கழுத்து

26. உயிர்எழுத்துகள் பிறக்கும் இடம் ____________.
a. கழுத்து b. மார்பு c. மூக்கு d. கழுத்து

27. பின்வருவனவற்றுள் தெரிநிலை வினைமுற்றுச்சொல் ______________.
a. எழுதினான் b. கரியன் c. எழுதுமின் d. ஒழிக

28. நீலகேசி கூறும் நோயின் வகைகள் __________.
a. இரண்டு b. மூன்று c. நான்கு d. ஐந்து

29. கீழ்க்காணும் சொற்களுள் பெயரெச்சம் ____________.
a. படித்து b. எழுதி c. வந்து d. பார்த்த

30. கடவுள் வாழ்த்து உட்பட நீதிநெறி விளக்கம் ____________ வெண்பாக்களைக் கொண்டது.
a. 102 b. 104 c. 106 d. 108

31. ஆசிரியரொடு மாணவன் வந்தான். இத்தொடரிலுள்ள மூன்றாம் வேற்றுமை உருபு உணர்த்தும் பொருள் ______________.
a. இயற்றுதல் கருத்தாப்பொருள் b. ஏவுதல் கருத்தாப் பொருள்
c. உடனிகழ்ச்சிப் பொருள் d. கருவிப் பொருள்

32. இடப்பொருளை உணர்த்தி வரும் வேற்றுமை ______________.
a. முதல் வேற்றுமை b. நான்காம் வேற்றுமை
c. ஏழாம் வேற்றுமை d. எட்டாம் வேற்றுமை

33. இரண்டாம் வேற்றுமைக்கு உரிய உருபு ____________.
a. ஆல் b. ஐ c. கு d. அது

APOLLO STUDY CENTRE

34. ஐந்தாம் வேற்றுமையிலும், ஏழாம் வேற்றுமையிலும் இடம்பெறும் உருபு ____________.
a. இன் b. அது c. கண் d. இல்

35. கயல்விழி என்பது ______________.
a. வேற்றுமைத்தொகை b. உவமைத்தொகை
c. உவமைத்தொகை d. எதுவுமில்லை

36. அலைகடல் என்பது _________________.
a. பண்புத்தொகை b. வினைத்தொகை
c. உம்மைத்தொகை d. உவமைத்தொகை

37. மலர்க்கை என்பது _______________.
a. வேற்றுமைத்தொகை b. உவமைத்தொகை
c. உம்மைத்தொகை d. பண்புத்தொகை

38. சேர சோழ பாண்டியர் என்பது ______________.
a. வேற்றுமைத் தொகை b. உவமைத்தொகை
c. உம்மைத்தொகை d. பண்புத்தொகை

39. தொகைநிலைத்தொடர் வகையையும் எடுத்துக்காட்டையும் பொருத்துக:

| தொகைநிலைத்தொடர்வகை | எடுத்துக்காட்டு |
|---|---|
| A. வேற்றுமைத்தொகை | 1. குயிலி வந்தனள் |
| B. வினைத்தொகை | 2. கருங்குதிரை |
| C. பண்பத்தொகை | 3. இரவு, பகல் |
| D. உவமைத்தொகை | 4. ஊறுகாய் |
| E. உம்மைத்தொகை | 5. தாமரை முகம் |
| | 6. பால் அருந்தினான் |

| | A | B | C | D | E |
|---|---|---|---|---|---|
| a. | 6 | 4 | 2 | 5 | 3 |
| b. | 1 | 2 | 3 | 4 | 5 |
| c. | 5 | 4 | 6 | 2 | 3 |
| d. | 4 | 1 | 2 | 5 | 3 |

40. பொருத்துக:

| | |
|---|---|
| A. வினைமுற்றுத்தொடர் | 1. உடைந்த நாற்காலி |
| B. விளித்தொடர் | 2. வந்து நின்றான் |
| C. பெயரெச்சத்தொடர் | 3. கண்ணா, வா! |
| D. வினையெச்சத்தொடர் | 4. வந்தான் இராமன் |

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 4 | 3 | 1 | 2 |
| b. | 2 | 4 | 1 | 3 |
| c. | 1 | 3 | 4 | 2 |
| d. | 4 | 3 | 2 | 1 |

APOLLO STUDY CENTRE

41. “இரவும் பகலும்“ என்பது ______________.
a. எண்ணும்மை
b. உம்மைத்தொகை
c. அன்மொழித்தொகை
d. பண்புத்தொகை

42. சேரர்களின் கொடி ____________ ஆகும்.
a. புலிக்கொடி
b. மீன்கொடி
c. விற்கொடி
d. குதிரைக்கொடி

43. “தமிழ்த்தாய்“ - இச்சொல்லுக்குரிய புணர்ச்சி _____________.
a. தோன்றல் b. கெடுதல் c. இயல்பு d. திரிதல்

44. கலிங்கத்துப்பரணி _____________ தாழிசைகள் கொண்டது.
a. 399 b. 499 c. 599 d. 699

45. அயோத்திதாசர் பிறந்த ஆண்டு ___________.
a. 1845 b. 1855 c. 1865 d. 1875

46. அடி ___________ வகைப்படும்.
a. இரண்டு b. நான்கு c. எட்டு d. ஐந்து

47. நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்
பண்புடை யாளர் தொடர்பு
இக்குறளில் அமைந்துள்ள அணி _____________.
a. பிறிது மொழிதல் அணி
b. வேற்றுமை அணி
c. உவமை அணி
d. எடுத்துக்காட்டு உவமை அணி

48. பொருத்துக:
A. நிறை — 1. பொறுமை
B. பொறை — 2. விருப்பம்
C. மதம் — 3. மேன்மை
D. மையல் — 4. கொள்கை

| | A | B | C | C |
|---|---|---|---|---|
| a. | 3 | 1 | 3 | 4 |
| b. | 1 | 4 | 2 | 3 |
| c. | 4 | 3 | 2 | 1 |
| d. | 2 | 1 | 4 | 3 |

49. தூக்கி + கொண்டு என்பனவற்றைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ____________.
a. தூக்கிகொண்டு
b. தூக்குக் கொண்டு
c. தூக்கிக் கொண்டு
d. தூக்கு கொண்டு

50. வேர்க்கடலை, மிளகாய்விதை, மாங்கொட்டை ஆகியவற்றைக் குறிக்கும் பயிர்வகை ____________.
a. குலைவகை
b. மணிவகை
c. கொழுந்துவகை
d. இலைவகை



APOLLO STUDY CENTRE

51. திருவள்ளுவர் விருந்தோம்பலை அமைத்த இயல்
a. அமைச்சியல் b. படைப்பியல்
c. துறவறவியல் d. இல்லறவியல்

52. இளையான்குடி மாறனார் விருந்தினரை உபசரித்த நிலையை விவரிக்கும் நூல் ____________
a. பெரியபுராணம் b. அரிச்சந்திர புராணம்
c. கந்தபுராணம் d. திருவிளையாடல் புராணம்

53. அதிவீரராம பாண்டியருக்கு வழங்கும் வேறு பெயர் ____________.
a. கோதண்டராமர் b. கலியாணராமர்
c. சீவலராமர் d. சீதாராமர்

54. என் மாமா வந்தது என்பது ____________
a. திணை வழு b. பால்வழு d. காலவழு d. எதுவுமில்லை

55. ஒரு விரலைக் காட்டி, 'இது சிறிதோ பெரிதோ'' என விளைவுவது ________.
a. விடைவழு b. வினாவழு
c. காலவழு d. மரபுவழு

56. அகத்திணைகள் ____________ வகைப்படும்.
a. மூன்று b. ஐந்து c. ஏழு d. எட்டு

57. ம.பொ. சிவஞானம் எழுதிய நூல்களுள் சாகித்திய அகாதெமி பரிசு பெற்ற நூல் __________.
a. வள்ளலார் வகுத்த வழி b. வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு
c. வள்ளலாரும் பாரதியும் d. வள்ளலாரும் காந்தியடிகளும்

58. கவிஞர் கண்ணதாசனின் இயற்பெயர் ____________, பிறந்த ஊர் ____________.
a. முத்துசாமி, சிறுமையிலூர் b. முத்துநாதன், சிறுவாபுரி
c. முத்தையா, சிறுகூடல்பட்டி d. முத்தையா, சின்னாளபட்டி

59. வெண்பா ____________ வகையாகும், ஆசிரியப்பா ____________ வகையாகும்.
a. நான்கு, ஐந்து b. ஐந்து, ஆறு
c. ஆறு, நான்கு d. மூன்று, நான்கு

60. 'இஸ்மத் சன்னியாசி'' என்பது ____________.
a. இந்தி மொழி b. உருது மொழி
c. அரேபிய மொழி d. பாரசீக மொழி

61. சங்க இலக்கியங்கள் அளவுக்கு விரிவாக உருவாக்கப்பட இலக்கியங்கள் உலகில் வேறு எம்மொழியிலும் இல்லை என்று கூறியவர்
a. மாக்சுமுல்லர் b. எமினோ
c. கமில்சுவலபில் d. தேவநேயப்பாவாணர்

62. திருக்குறள் ஒரு வகுப்பார்க்கோ ஒரு மதத்தார்க்கோ ஒரு நிறத்தார்க்கோ ஒரு மொழியார்க்கோ ஒரு நாட்டார்க்கோ உரியதன்று அது மன்பதைக்கு – உலகுக்குப் பொது – என்றவர் யார்?

a. திரு.வி.க  b. கி.ஆ.பெ. விசுவநாதம்
c. கால்டுவெல்  d. கிரௌல்

63. பொருத்துக:

A. எண்கு  1. பன்றி
B. கேழல்  2. கரடி
C. கேசரி  3. மான்
D. மரை  4. சிங்கம்

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 4 | 1 | 2 | 3 |
| b. | 2 | 3 | 1 | 4 |
| c. | 2 | 1 | 4 | 3 |
| d. | 3 | 4 | 1 | 2 |

64. தமிழ் இலக்கணம் படிக்க படிக்க விருப்பத்தை உண்டாக்கும் என்றவர்

a. கால்டுவெல்  b. கெல்லட்
c. வீரமாமுனிவர்  d. ஜி.யு. போப்

65. சரியான வரிசையில் அமைந்த சொற்றொடரைக் கண்டறிக.

a. மேனி வளைத்துவாய் பணிந்து மண்ணுறப் புதைத்து நின்றான்.
b. வாய் புதைத்து மேனிப் பணிந்து மண்ணுற வளைந்து நின்றான்
c. மண்ணுறப் பணிந்து மேனி வளைத்துவாய் புதைத்து நின்றான்
d. மண்ணுறப் பணிந்து வாய் வளைத்து மேனி புதைத்து நின்றான்

66. நற்றிணையின் அடிவரையறை

a. 3 முதல் 5 வரை  b. 13 முதல் 21 வரை
c. 4 முதல் 6 வரை  d. 9 முதல் 12 அடி வரை

67. திராவிடம் என்னும் சொல்லை முதன்முதலில் பயன்பாட்டுக்குக் கொண்டு வந்தவர் யார்?

a. அகத்தியலிங்கம்  b. ஜி.யு. போப்
c. வீரமாமுனிவர்  d. கால்டுவெல்

68. கூற்றுகளை ஆராய்க.

I. ஒன்று பெற்றால் ஒளி மயம்
II. நான்கு லிட்டர் பால் கொடு
III. ஐந்து மீட்டர் துணி வேண்டும்
IV. ஐந்து கிலோ என்ன விலை?

இவற்றுள் ஆகுபெயர்களைத் தேர்ந்தெடுக்க:

a. I மட்டும்  b. I, II, III மட்டும்
c. I, IV மட்டும்  d. அனைத்தும்

69. குறுந்தொகைப் பாடல்களைத் தொகுத்தவர்

a. பூரிக்கோ b. பெருந்தேவனார்
c. உருத்திரசன்மர் d. கூடலூர்கிழார்

70. பொருத்துக:

A. தொழிற்பெயர் — 1. நன்றி
B. முதனிலைத் திரிந்த தொழிற்பெயர் — 2. அகழ்வார்
C. பண்புப்பெயர் — 3. சூடு
D. வினையாலணையும் பெயர் — 4. வருதல்

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| A. | 4 | 3 | 1 | 2 |
| B. | 4 | 3 | 2 | 1 |
| C. | 2 | 4 | 3 | 1 |
| D. | 1 | 3 | 4 | 2 |

71. பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம்
சால மிகுத்துப் பெயின் - இங்கு பயின்று வந்துள்ள அணி

a. வேற்றுமையணி b. நிரல்நிரையணி
c. இல்பொருள் உவமையணி d. பிறிதுமொழிதலணி

72. தவறான மரபுச்சொல்லைக் கண்டறிக.

a. குரங்கு அலப்பும் b. கூகை குனுகும்
c. வண்டு முரலும் d. பூனை சீறும்

73. 'திராவிட' எனும் சொல் தமிழிலிருந்து உருவானதை தமிழ் , திரமிள , திரவிட , திராவிட என்று கூறியவர் யார்?

a. கால்டுவெல் b. எமினோ
c. ஈராஸ் பாதிரியார் d. ச. அகத்தியலிங்கம்

74. மலைபடுகடாம் என்ற நூலின் ஆசிரியர் யார்?

a. பெருங்கௌசிகனார் b. நத்தத்தனார்
c. கணிமேதாவியார் d. நப்பூதனார்

75. கிழமைப் பொருளில் வருவது

a. மூன்றாம் வேற்றுமை b. ஆறாம் வேற்றுமை
c. எட்டாம் வேற்றுமை d. ஐந்தாம் வேற்றுமை

76. பொருத்துக:

A. கலம் — 1. இடைப்போலி
B. மயல் — 2. இறுதிப்போலி
C. அஞ்சு — 3. முற்றுப்போலி
D. இலஞ்சி — 4. முதற்போலி

APOLLO STUDY CENTRE

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 3 | 4 | 1 | 2 |
| b. | 2 | 4 | 3 | 1 |
| c. | 2 | 4 | 1 | 3 |
| d. | 4 | 3 | 2 | 1 |

77. உவமானத்தின் தன்மைகளை உவமேயத்தில் ஏற்றிக் கூறுவது
a. உவமையணி b. உருவக அணி
c. இயல்புநவிற்சி அணி d. எடுத்துக்காட்டுவமையணி

78. கங்கா நதியும் கடாரமும் கைக்கொண்டு
சிங்கா தனத்திருந்த செம்பியனும் - இதில் செம்பியன் எனக்குறிக்கப்படும் அரசன் யார்
a. இராசேந்திரன் b. இராசாதிராசன்
c. இராசமகேந்திரன் d. முதல் இராசராசன்

79. இந்திய அரசு வனவிலங்குப் பாதுகாப்புச் சட்டத்தை இயற்றிய ஆண்டு
a. 1976 b. 1972 c. 1973 d. 1977

80. கீழ்க்கண்டவற்றுள் பொருந்தாததைத் தேர்ந்தெடு.
a. கொரகா b. கதபா c. மண்டா d. கோயா

81. தவறான இணையை கண்டறிக.
a. தண்ணீர் தண்ணீர் - கந்தர்வன்
b. தண்ணீர் தேசம் - வைரமுத்து
c. வாய்க்கால் மீன்கள் - வெ. இறையன்பு
d. மழைக்காலமும் குயிலோசையும் - மா. கிருஷ்ணன்

82. முறையான தொடர் அமைப்பினைக் குறிப்பிடுக.
a. தமிழர்களின் வீரவிளையாட்டு தொன்மையான ஏறுதழுவுதல்.
b. தமிழர்களின் வீரவிளையாட்டு ஏறுதழுவுதல் தொன்மையான.
c. தொன்மையான வீரவிளையாட்டு தமிழர்களின் ஏறுதழுவுதல்.
d. தமிழர்களின் தொன்மையான வீரவிளையாட்டு ஏறுதழுவுதல்.

83. பாரதிதாசன் எந்த நூலுக்கு சாகித்ய அகாதெமி விருது பெற்றார்?
a. பாண்டியன் பரிசு b. இருண்டவீடு
c. அழகின் சிரிப்பு d. பிசிராந்தையார்

84. தவறான இணையைத் தேர்ந்தெடு.
a. புரிசை - மதில் b. அணங்கு - தெய்வம்
c. பணை - ஓவியம் d. கயம் - நீர்நிலை

85. எந்த வருடம் ஈ.வெ.ரா வுக்குப் பெரியார் பட்டம் வழங்கப்பட்டது?
a. 1938 b. 1944 c. 1924 d. 1969

86. பெருமாள் திருமொழியைப் பாடியவர்
a. ஆண்டாள் b. குலசேகர ஆழ்வார் c. அப்பர் d. மாணிக்கவாசகர்

87. “வைகறை” எத்திணைக்குரிய சிறுபொழுது.

APOLLO STUDY CENTRE

a. குறிஞ்சி b. முல்லை c. மருதம் d. நெய்தல்

88. பொருத்துக

| | | |
|---|---|---|
| A. | தமிழ் - தமிழ் அகராதி | 1. குப்புசாமி |
| B. | தமிழ்ச் சொல்லகராதி | 2. வின்சுலோ |
| C. | தமிழ் பேரகராதி | 3. லெவி - ஸ்பால்டிஸ் |
| D. | தமிழ் - ஆங்கிலப் பேரகராதி | 4. யாழ்ப்பாணம் கதிரைவேலனார் |
| E. | 20ஆம் நூற்றாண்டுத் தமிழகராதி | 5. இராமநாதன் |

| | A | B | C | D | E |
|---|---|---|---|---|---|
| a. | 4 | 3 | 2 | 1 | 5 |
| b. | 3 | 2 | 1 | 4 | 5 |
| c. | 3 | 4 | 1 | 2 | 5 |
| d. | 1 | 2 | 3 | 4 | 5 |

89. சூரிய நாராயண சாஸ்திரி என்ற தம் பெயரை முதன் முதலில் எந்த நூலில் பரிதிமாற் கலைஞர் என பெயர்மாற்றம் செய்தார்?

a. ரூபாவதி b. கலாவதி
c. தனிப்பாசுரத் தொகை d. தமிழ் வியாசங்கள்

90. “தமிழ்ப்பெருங்காவலர்” – என அழைக்கப்படும் சான்றோர்?

a. கி.ஆ.பெ. விஸ்வநாதன் b. சி.சு. செல்லப்பா
c. தேவநேயப்பாவாணர் d. பாரதிதாசன்

91. பொருத்துக

| | | |
|---|---|---|
| A. | பால்வண்ணம்பிள்ளை | 1. ராஜம்கிருஷ்ணன் |
| B. | சட்டை | 2. நாஞ்சில் நாடன் |
| C. | கிழிசல் | 3. புதுமைப்பித்தன் |
| D. | வேலி | 4. கந்தர்வன் |
| E. | ஒவ்வொரு கல்லாய் | 5. ஜெயகாந்தன் |

| | A | B | C | D | E |
|---|---|---|---|---|---|
| a. | 3 | 5 | 2 | 1 | 4 |
| b. | 5 | 3 | 2 | 4 | 1 |
| c. | 4 | 5 | 2 | 1 | 3 |
| d. | 4 | 2 | 1 | 5 | 3 |

92. வீரமாமுனிவர் இயற்றாத நூல் எது?

a. திருக்காவலூர்க் கலம்பகம் b. தமிழ் செய்யுட் கலம்பகம்
c. தொன்னூல் விளக்கம் d. ஞானோபதேசம்

93. ‘வசனநடை கைவந்த வல்லாளர்’ என்று ஆறுமுக நாவலரைப் பாராட்டியவர் யார்?

a. இராமலிங்க அடிகளார் b. பாண்டித்துரைத் தேவர்
c. மறைமலையடிகள் d. பரிதிமாற்கலைஞர்

94. நடுவணரசு தமிழைச் செம்மொழியாக அறிவித்த ஆண்டு

APOLLO STUDY CENTRE

a. 2006 b. 2008 c. 2004 d. 2002

95. தன்னை ‘ஷெல்லிதாசன்’ என்று அழைத்துக் கொண்டவர் யார்?
a. பாரதியார் b. பாரதிதாசன் c. கவிமணி d. சாலை இளந்திரையன்

96. பொருத்துக

| | |
|---|---|
| A. மாங்கனி | 1. வரலாற்றுப் புதினம் |
| B. இராச தண்டனை | 2. புதினம் |
| C. வேலங்குடி திருவிழா | 3. இதழ் |
| D. சேரமான் காதலி | 4. நெடுங்கவிதை |
| E. தமிழ்மலர் | 5. நாடகம் |

| | A | B | C | D | E |
|---|---|---|---|---|---|
| a. | 2 | 1 | 4 | 3 | 5 |
| b. | 4 | 3 | 2 | 1 | 5 |
| c. | 4 | 5 | 2 | 1 | 3 |
| d. | 1 | 2 | 3 | 4 | 5 |

97. வேலுநாச்சியார் சிவகங்கையை ஆங்கிலேயரிடமிருந்து மீட்ட ஆண்டு
a. 1730 b. 1750 c. 1780 d. 1790

98. எட்டுத்தொகை நூல்களுள் புறப்பொருள் பற்றிய நூல்கள் யாவை?
a. பதிற்றுப்பத்து, கலித்தொகை b. அகநானூறு, புறநானூறு
c. குறுந்தொகை, பரிபாடல் d. பதிற்றுப்பத்து, புறநானூறு

99. கண்ணுதல் - இலக்கணக் குறிப்பு தருக.
a. ஒருபொருட்பன்மொழி b. பண்புத்தொகை
c. இலக்கணப்போலி d. வினைத்தொகை

100. பெருமாள் திருமொழியில் இடம்பெற்றுள்ள பாடல்களின் எண்ணிக்கை
a. 103 b. 105 c. 108 d. 97

APOLLO STUDY CENTRE

## TNUSRB – SUB INSPECTOR RECRUITMENT TRAINING – 2022
## MODEL EXAM II – TAMIL ELIGIBILITY TEST – ANSWER

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| **B** | **B** | **B** | **C** | **C** | **C** | **C** | **D** | **A** | **B** |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| **A** | **A** | **B** | **C** | **B** | **B** | **D** | **D** | **D** | **C** |
| 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 |
| **B** | **D** | **D** | **C** | **B** | **D** | **A** | **B** | **D** | **A** |
| 31 | 32 | 33 | 34 | 35 | 36 | 37 | 38 | 39 | 40 |
| **C** | **C** | **B** | **D** | **B** | **B** | **B** | **C** | **A** | **A** |
| 41 | 42 | 43 | 44 | 45 | 46 | 47 | 48 | 49 | 50 |
| **A** | **C** | **A** | **C** | **A** | **D** | **C** | **A** | **C** | **B** |
| 51 | 52 | 53 | 54 | 55 | 56 | 57 | 58 | 59 | 60 |
| **D** | **A** | **C** | **A** | **B** | **C** | **B** | **C** | **C** | **D** |
| 61 | 62 | 63 | 64 | 65 | 66 | 67 | 68 | 69 | 70 |
| **C** | **A** | **C** | **B** | **C** | **D** | **D** | **C** | **A** | **A** |
| 71 | 72 | 73 | 74 | 75 | 76 | 77 | 78 | 79 | 80 |
| **D** | **B** | **C** | **A** | **B** | **B** | **B** | **A** | **B** | **D** |
| 81 | 82 | 83 | 84 | 85 | 86 | 87 | 88 | 89 | 90 |
| **A** | **D** | **D** | **C** | **A** | **B** | **C** | **C** | **C** | **C** |
| 91 | 92 | 93 | 94 | 95 | 96 | 97 | 98 | 99 | 100 |
| **A** | **B** | **D** | **C** | **A** | **C** | **C** | **D** | **C** | **B** |

APOLLO STUDY CENTRE